JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 81/2016 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW1 | Prosecution /Defence / Court | |
| Name | Prema | Caste | |
| Father's Name | W/o.Ramakrishnan | Calling | |
| Village | Mettukadai | Religion | |
| Taluk | Perundurai | Age | |

(**A**1-**Tata Prabhu**, **S/o**.**Subramaniam**, **A**2-**Dhanasekar @ Dhandapani**, **S/o**.**Murugan are present**)

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 07.02.2023

**முதல் விசாரணை**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு இல்லத்தரசியாக இரந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் ஈரோடு, திண்டல் மாருதி நகரில் குடியிருந்தேன். கடந்த 07.06.2016 ம் தேதி நான் வீட்டில் குடியிருந்த உரிமையாளர் ராஜராஜேஸ்வரி சித்தமருத்துவமனைக்கு சென்று வீட்டை காலி செய்துவிட்டதால் அட்வாண்ஸ் பணம் கேட்டு வாங்குவதற்காக இரவு சுமார் 9.30 மணிக்கு மேல் பேருந்து காடபாளையம் பேருந்து நிலையத்தில் இருநபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் என்னுடைய கணவர் என் அருகில் நின்றுகொண்டிருந்தவரிடம் விலாசம் விசாரித்தார்கள்.

2)நான் கழுத்தில் அணிந்திருந்த ஐந்து பவுன் எடையுள்ள தங்க செயினை இருசக்கர வாகனத்தில் வந்த இருவரும் வாகனத்தை நிறுத்திவிட்டு இறங்கி வந்து ஒரு நபர் முகவரியை விசாரிக்க மற்றொரு நபர் நான் அணிந்திருந்த ஐந்து பவுன் தங்க செயினை எனக்கு பின்புறம் வந்து பறித்துகொண்டு ஓடினார். முகவரியை விசாரித்தவரும் அவருடன் ஓடியபோது என் கணவர் நில்லுடா என்று கூறி ஓடினார். ஆஜர் எதிரிகள்தான் இருசக்கர வாகனத்தில் வந்து என் செயினை பறித்த நபர்கள் ஆவார்கள். என் கணவர் செயினை பறித்த நபர்களை துரத்தி சென்றபோது தடுக்கி கீழே விழுந்துவிட்டார்.

3)அதன்பின்னர் ஆஜர் எதிரிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் ஏறி சென்றுவிட்டார்கள். அதன்பின்னர் கூட்டம் கூடிவிட்டது. அவர்களை தேடி பார்த்தும் கிடைக்கவில்லை. அன்றைய தினம் காவல் நிலையம் செல்லலாம் என்று இருந்தபோது நேரம் ஆகிவிட்டதால் வீட்டிற்கு போய்விட்டோம். மறுநாள் 08.06.2016 ம் தேதி பெருந்துறை காவல் நிலையத்திற்கு வந்து எழுத்துமூலமான புகார் கொடுத்தேன். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அன்றைய தினம் என்னை பெருந்துறை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரிக்க எனக்கு தெரிந்த விபரங்களை கூறினேன்.

4)அதன்பின்னர் ஆகஸ்ட் மாதம் 19 ம் தேதியன்று காவல் நிலையத்தில் இருந்து போன் செய்து என்னை வரச்சொன்னதன்பேரில் நானும், எனது கணவரும் காவல் நிலையத்திற்கு வந்தோம். அங்கிருந்த ஆஜர் எதிரிகளையும் என்னிடம் இருந்து பறித்து சென்ற செயினையும் என்னுடயதுதான் என்று நான் அடையாளம் காட்டினேன். அன்றைய தினம் போலிசார் என்னை விசாரித்தார். அதன்பின்னர் நான் நீதிமன்றத்தில் மனு செய்து என்னுடைய ஐந்து பவுன் எடையுள்ள தங்க செயினை பெற்றுசென்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் கண்ட செயினை தான் நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுசென்றேன். (**இந்த புகைப்படங்கள் நான்கும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 81/2016 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW2 | Prosecution /Defence / Court | |
| Name | Ramakrishnan | Caste | |
| Father's Name | Kannaiyan | Calling | |
| Village | Mettukadai | Religion | |
| Taluk | Perundurai | Age | |

(**A**1-**Tata Prabhu**, **S/o**.**Subramaniam**, **A**2-**Dhanasekar @ Dhandapani**, **S/o**.**Murugan are present**)

Solemnly affirmed in accordance with the provisions of the oaths  Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 07.02.2023

<u>முதல் விசாரணை</u>

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு ஈரோடு வேளாளர் கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் ஈரோடு, திண்டல் மாருதி நகரில் குடியிருந்தேன். கடந்த 07.06.2016 ம் தேதி நான் வீட்டில் குடியிருந்த உரிமையாளர் ராஜராஜேஸ்வரி சித்தமருத்துவமனைக்கு சென்று வீட்டை காலி செய்துவிட்டதால் அட்வாண்ஸ் பணம் கேட்டு வாங்குவதற்காக இரவு சுமார் 9.30 மணிக்கு மேல் பேருந்து காடபாளையம் பேருந்து நிலையத்தில் நானும், எனது மனைவியும் பேருந்திற்காக நின்றுகொண்டிருந்தபோது இருநபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் என்னிடம் என் அருகில் வந்து விலாசம் விசாரித்தார்கள்.

2)அப்போது நான் என்னுடைய செல்போனை பார்த்துகொண்டிருந்தபோது என் அருகில் நின்றிருந்த என் மனைவியிடம்  மற்றொருவர் வந்து என் மனைவி கழுத்தில் அணிந்திருந்த ஐந்து பவுன் எடையுள்ள தங்க செயினை பறித்து சென்றார். ஆஜர் எதிரிகள்தான் இருசக்கர வாகனத்தில் வந்து என் மனைவியின் செயினை பறித்த நபர்கள் ஆவார்கள். நான் செயினை பறித்த நபர்களை துரத்தி சென்றபோது தடுக்கி கீழே விழுந்துவிட்டேன். சத்தம் போட்டதால் அங்கே கூட்டம் கூறிவிட்டது. செயினை பறித்த நபரும் என்னிடம் விலசாம் விசாரித்த நபரும் இருசக்கர

வாகனத்தில் சென்றுவிட்டார்கள்.

3)நானும், எனது மனைவியும், அக்கம்பக்கம் இருந்தவர்களும் அவர்களை துரத்தி சென்று அவர்களை பிடிக்க முயன்றபோது அவர்களை பிடிக்க முடியவில்லை. அன்றைய தினம் இரவு நேரம் ஆகிவிட்டதால் வீட்டிற்கு சென்றுவிட்டு மறுநாள் 08.06.2016 ம் தேதியன்று பெருந்துறை காவல் நிலையத்தில் என் மனைவி எழுத்துமூலமான புகாரை கொடுத்து பறித்து சென்ற செயினை மீட்டு தருமாறு கேட்டுகொண்டார். அன்றைய தினம் பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரிக்க நான் நடந்த விபரங்களை கூறினேன். அதன்பின்னர் ஆகஸ்ட் மாதம் 19 ம் தேதியன்று பெருந்துறை காவல் நிலையத்தில் இருந்து போன் செய்து காவல் நிலையத்திற்கு வந்து செயினை அடையாளம் காட்டுமாறு கேட்டுகொண்டதால் நானும், எனது மனைவியும் காவல் நிலையம் வந்து செயினை அடையாளம் காட்டினோம்.

4)ஆஜர் எதிரிகளையும், நானும், எனது மனைவியும் அடையாளம் காட்டினோம். அன்றைய தினம் போலிசார் என்னை விசாரிக்க எனக்கு தெரிந்த விபரங்களை நான் கூறினேன். அதன்பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து எனது மனைவி செயினை பெற்றுவந்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 81/2016 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW3 | Prosecution /Defence / Court | |
| Name | Gopal | Caste | |
| Father's Name | Palanisamy | Calling | |
| Village | Kadapalayam | Religion | |
| Taluk | Perundurai | Age | |

**(A1-Tata Prabhu, S/o.Subramaniam, A2-Dhanasekar @ Dhandapani, S/o.Murugan are present)**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 07.02.2023

**முதல் விசாரணை**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை 07.06.2016 ம் தேதியன்று இரவு 9.45 மணி அளவில் நான் பார்த்தேன். 07.06.2016 ம் தேதி இரவு 9.45 மணி அளவில் நானும் எனது மாமா நல்லசாமி என்பவரும் காடபாளையம் பேருந்து நிறுத்தத்தில் பேசிகொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அ.சா.1 பிரேமாவும், அவரது கணவரும் பேருந்து நிறுத்தத்தில் பேருந்திற்காக நின்றுகொண்டிருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரிகளில் ஒருவரான இரண்டாம் எதிரி தனசேகர் அசா1 பிரேமா மற்றும் அவரது கணவரிடம் பேசிகொண்டிருந்தார்.

2)அதன்பின்னர் மற்றொரு எதிரியான டாடா பிரபு இருசக்கர வானத்தில் அமர்ந்திருந்தார். அப்போது அ.சா.1 ஐயோ, ஐயோ என்று கத்தினார். அப்போது வண்டியை ஸ்டார்ட் செய்து இருநபர்களும் சென்றார்கள். அவர்களை இருசக்கர வாகனத்தை துரத்தி கொண்டு அ.சா.2 ஓடினார். அப்போது அவர் கீழே விழுந்துவிட்டார். அப்போது நானும் எனது இருசக்கர

வாகனத்தை எடுத்துகொண்டு ஆஜர் எதிரிகளின் இருசக்கர வாகனத்தை துரத்தி பிடிக்க முயன்றேன். நான் அண்ணா சிலை வரை சென்றேன்.

3)அதன்பின்னர் என்னால் அவர்களை பிடிக்க முடியவில்லை. அதன்பின்னர் திரும்பி வந்து அ.சா.1 டம் கேட்டபோது ஐந்து பவுன் செயினை அ.சா.1 ன் கழுத்தில் இருந்து பறித்து சென்றுவிட்டதாக கூறினார்கள். 1 ம் எதிரி டாடா பிரபு  இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார். 2 ம் எதிரி தனசேகரன் அ.சா.1 நின்றுகொண்டிருந்த இடத்தில் இருந்து ஓடி சென்று 1 ம் எதிரி உட்கார்ந்து இருந்த பைக்கில் ஏறியதை நான் பார்த்தேன். 2 ம் எதிரி செயினை பறித்து சென்றதை நான் பார்க்கவில்லை. அதன்பின்னர் மறுநாள் 08.06.2016 ம் தேதி  என்னை பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் விசாரிக்க எனக்கு தெரிந்த விபரங்களை நான் கூறினேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.